# மாகாணக்கல்வித்திணைக்களம்

## வடமாகாணம்

## க.பொ.த (உ/தர) பரீட்சை - 2020

## பயிற்சிப்பரீட்சை வினாத்தாள் 2

## பரதநாட்டியம் 1 (53T1)

**பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

1. “தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில்..” என்ற பாடலில் குறிப்பிடப்படும் சிவனின் வடிவம்
   1.பைரவர் 2.சோமாஸ்கந்தர் 3.நடராஜர் 4அர்த்தநாரீஸ்வரர் 5.வீரபத்திரர்
2. ; ஹரிரிகமுத்தவதூநிகரே.. இப்பாடலின் எடுப்பு
   1.சமஎடுப்பு 2.அதீதஎடுப்பு 3.அநாகதஎடுப்பு 4.ஜதிஎடுப்பு 5.விவாதிஎடுப்பு
3. தாவரம்,பறவை,விலங்குகளை முதலில் குறிப்பிட்ட நூல்
   1.நாட்டியசாஸ்திரம் 2.அபிநயதர்ப்பணம் 3.பரதக்கலை 4.பரதநாட்டியம் 5.ஆடற்கலை
4. ஆடுமகள் என வெறியாடும் பெண்கள் அழைக்கப்பட்ட காலம்
   1.சங்ககாலம் 2.சங்கமருவியகாலம் 3.பல்லவர்காலம் 4.சோழர்காலம் 5.நாயக்கர்காலம்
5. “கனக்ரெலே” என்ற நாட்டியக் கலைஞர் கலாநிதிப் பட்டம் பெற்ற ஆடல்
   1.ஓடிசி 2.கதக் 3.மணிப்புரி 4.கதகளி 5.மோகினியாட்டம்
6. ஸ்ரீகிருஸ்ணனைக் கதக்நடனமரபில் தெய்வீகநடனக்காரன் என்ற பொருள்பட அழைக்கும் பெயர்
   1.மாலோன் 2.நடவர 3.மாதவன் 4.ரமணன் 5.கோபாலன்
7. நாயகனிடத்தில் கோபங் கொண்ட நாயகியைச் சமாதானம் செய்வதில் வல்லதூதன்
   1.பீடமர்த்தன் 2.விதூஷன் 3.சேடன் 4.விடன் 5.தோழன்
8. ரஸங்கள் எட்டு எனக் குறிப்பிடும் பழந்தமிழ்நூல்
   1.சிலப்பதிகாரம் 2.நன்னூல் 3.அகத்தியம் 4.பஞ்சமரபு 5.தொல்காப்பியம்
9. நாரதர் எழுதிய சங்கீதமகரந்தம் என்ற நூலில் குறிப்பிடப்படும் இசைக்கருவி
   1.வீணை 2.யாழ் 3.மிருதங்கம் 4.தவில் 5.நாதஸ்வரம்
10. குச்சுப்புடி என்பது நடனக்காரரின் கிராமம் எனப்பொருள்படும் எனக் கூறியவர்
    1.சித்தேந்திரயோகி 2.நாராயணதீர்த்தர் 3.பேரையாசாஸ்திரி
    4.லக்ஷமிநாராயணசாஸ்திரி 5.கலாநிதி ஆருத்ரா
11. நாயகிக்குத் தேவையான அலங்காரப் பொருட்களைச் சேகரிப்பதில் தேர்ச்சி பெற்றவள்
    1.சேடி 2.தாஸி 3.ப்ராதிவேசினி 4.இலிங்கினி 5.சில்பினி
12. “ஹாஸ்யரஸத்தில் மத்திய பாத்திரங்களுக்குரிய ஹாஸ்ய ரஸங்களாவன
    1. ஸ்கித்தம்,உபஹஸித்தம் 2. ஹஸித்தம், உபஹஸித்தம் 3. விஹஸித்தம், உபஹஸித்தம்
    4. ஹஸித்தம், அபஹஸித்தம் 5. உபஹஸித்தம், அபஹஸித்தம்
13. “அரங்கேற்றம் என்பது ஒரு கலைஞனின் ஆரம்பப் படியாகும்”என அரங்கேற்றம் பற்றி குறிப்பிட்டவர்
    1.திரு.கே.என்.தண்டாயுதபாணிப்பிள்ளை 2.ஸ்ரீமதி ருக்மணி அருண்டேல்
    3.அபிநயஅரசி பாலசரஸ்வதி 4.கனம் கிருஸ்ணையர் 5.வழுவூர் இராமையாபிள்ளை
14. ஆரம்பத்தில் பூசைத்தாளம் வாசிக்கப்படும் கூத்து
    1. மகிடிக்கூத்து 2.வசந்தன்கூத்து 3.வடமோடி 4.பறைமேளக்கூத்து 5.தென்மோடி
15. கண்டியநடனத்தில் கௌதம புத்தரைப் போற்றிப் புகழ்ந்த ஆடும் வண்ணம்
    1.ஈரடிவண்ணம் 2.சவுளாவண்ணம் 3.அஸத்ருஸவண்ணம் 4.மயூரவண்ணம் 5.கஜகவண்ணம்
16. வாய்ப்பகுதியில் பித்தளையிலான சிறுபகுதி,நுனிப்பகுதியில் தொங்கும் மணிகள் கொண்ட சங்கு
    1.சலஞ்சலசங்கு 2.வலம்புரிச்சங்கு 3.இடம்புரிச்சங்கு 4.தவளசங்கு 5.பாஞ்சசன்யசங்கு

17. “நாட்டியபிரம்மா” என்ற விருது பெற்றவர்
1.கூத்தனார் 2.பரதமுனிவர் 3.நந்திகேஸ்வரர் 4.தொல்காப்பியர் 5.அறம்வளர்தனார்
18. ஆலய வழிபாட்டில் பிரம்மாவையும், எட்டுத்திக்குப் பாலகர்களையும் காவல் புரியுமாறு வேண்டி வழிபாடு செய்யும் போது இடம்பெறும் நடனசமர்ப்பணம்
1.புக்ரமாலி 2.ஶ்ரீபலி 3.நவசந்தி 4.தோடயமங்களம் 5.கவுத்துவம்
19. கலாசேத்திராவில் பரத ஆடல் பயின்ற பரதக் கலைஞராகவும் பிரபல குச்சுப்புடி நடனக்கலைஞராகவும் திகழ்ந்தவர்
1.கிருஸ்ணவேணி லக்ஸ்மணன் 2.புஸ்பாசங்கர் 3.லீலாசாம்சன்
4.அம்பிகா பூச் 5.யாமினி கிருஸ்ணமூர்த்தி
20. சலனம், குன்தானம் என்ற இருபிரிவுகளையுடைய தாண்டவம் காணப்படும் நடனவடிவம்
1.மோகினியாட்டம் 2.கதக் 3.கதகளி 4.மணிப்புரி 5.ஒடிசி
21. யாழ் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைத்துறை கற்கைநெறி நுண்கலைமாணி என்ற பட்டத்திற்குரியதாக்கப்பட வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தவர்
1.பேராசிரியர் சு.வித்தியானந்தன் 2. பேராசிரியர்.கா.சிவத்தம்பி 3. பேராசிரியர்.க.கைலாசபதி
4. பேராசிரியர்.வி.சிவசாமி 5. பேராசிரியர்.க.கைலாசநாதக்குருக்கள்
22. கண்டஜாதி மட்டியதாளம் சதுஸ்ர கதியுடன் பேதமடையும் போது அதன் எண்ணிக்கை
1.108 2.84 3.60 4.48 5.36
23. தளாங்குதொம் என்ற ஆடலசைவுக்கான பாதபேதம்
1.சமபாதம் 2.உத்பிளவனம் 3.ஆலீடம் 4.ஐந்திரம் 5.அலகம்
24. சப்பிரகமுவ நடனத்தில் மட்டும் காணப்படும் மிகமுக்கியமான பெரஹர நடனம்
1.மஹாம்பாகோலம் 2.கொஹம்பகங்காரிய 3.கோலம் 4.சொக்கரி 5.கஜகவண்ணம்
25. வேட்டுவவரியில் எயினர்களின் குறைகளைச் சுட்டிக்காட்டும் தெய்வமுற்ற பெண் எனக்கருதப்படுபவள்
1.தேவந்தி 2.மாதவி 3.நதானந்தசெட்டி 4.தேவிசெட்டி 5.சாலினி
26. “என்னமோ கனமாக இருக்குதடி..”,”வருவேன் வருவேன்..”என்ற பதங்களை இயற்றியவர்
1.திரு.எல்.திலகநாயகம் போல் 2.திரு.வி.கே.நல்லையா 3.திரு.ம.கைலாயபிள்ளை
4.திரு.ந.வீரமணிஐயர் 5.திரு.ஏரம்பு.சுப்பையா
27. மன்னார் பிரதேசத்தில் காணப்படும் தனித்துவமான கத்தோலிக்கக் கூத்து
1.வடபாங்கு 2. வடமோடி 3.தென்பாங்கு 4. தென்மோடி 5.வாசாப்பு
28. தற்கால ஆடல்கள் பெரும்பாலும் ஆற்றுகை செய்யப்படும் அரங்கு
1.விகிருதம் 2.வட்டக்களரி 3.படச்சட்டம் 4.அவரம் 5.திரியம்
29. குற்றாலக்குறவஞ்சியில் உலாவரும் குற்றாலநாதரைக் கண்டு காதல் கொள்ளும் நாயகி
1.மீனாட்சி 2.சீதை 3.பாஞ்சாலி 4.வசந்தவல்லி 5.மாதவி
30. சோழர்காலத்தில் ஆடற்கலைஞர்கள் ஆடல் பயில்வதற்காக கோயிலுக்கு வெளியே அமைந்த மண்டபம்
1.அம்பலம் 2.நாடகசாலை 3.திருவரங்கு 4.சதுர்சாலை 5.நிருத்தமண்டபம்
31. நாட்டியசாஸ்திரத்தில் 35 ஆவது அத்தியாயத்தில் விளக்கப்பட்டிருப்பது
1.நடனத்தின்பயன் 2.இசை 3.பாத்திரத்தெரிவு 4.அபிநயமுறை 5.முத்திரைகள்
32. மகிடிக்கூத்தை நெறிப்படுத்தி ஆற்றுகை செய்விப்பவர்
1.சாம்பலாண்டியர் 2.நட்டுவனார் 3.பாகவதர் 4.குரு 5.ஆசிரியர்
33. தெய்யும், தத்த, தெய்யும், தா, இவ்வடவுச்சொற்கட்டு அமைந்துள்ள ஜாதி
1.சதுஸ்ரம் 2.கண்டம் 3.மிஸ்ரம் 4.திஸ்ரம் 5.சங்கீரணம்
34. நடராஜ திருவுருவத்தில் உடுக்கையால் குறிக்கப்படும் தொழில்
1.அருளல் 2.படைத்தல் 3.காத்தல் 4.அழித்தல் 5.மறைத்தல்
35. அபிநய அரசகேசரி என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட நம்நாட்டு நடனக்கலைஞர்
1.திரு.வி.கே.நல்லையா 2.திரு.க.தொம்மைக்குட்டி 3.திரு.ஏரம்பு.சுப்பையா
4.தி.ம.கைலாசபிள்ளை 5.பிரம்மஶ்ரீ.வீரமணிஐயர்
36. பாரதத்தின் மிகப்பெரிய கலைக்கூடமான கலாசேத்திரம் அமைந்துள்ள இடம்
1.திருவான்மியூர் 2.சிதம்பரம் 3.திருவாரூர் 4.திருச்சி 5.மதுரை

37. மட்டக்களப்பில் 1982இல் சுவாமி விபுலானந்தர் அழகியற்கற்கை நிறுவனத்தை ஆரம்பித்து வைத்தவர்
1.திரு.சிவானந்தம்பிள்ளை 2.திரு.செ.இராஜதுரை 3.சுவாமி சிவானந்தமகராஜ்
4.திரு.கே.ஆர்.நடராஜா 5.சுவாமி விபுலானந்தர்
38. "ஸரிக கொங்கு.." "மாலை மயங்கும்நேரம்.." ஆகிய பாடல்கள் அடங்கிய உருப்படி
1.பதம் 2.கீர்த்தனை 3.சப்தம் 4.அஸ்டபதி 5.ஜாவளி
39. கோவிந்தாச்சாரியார் தனது சங்கிரகசூடாமணி என்ற நூலில் எழுதியுள்ள விடயம்
1.175தாளங்கள் 2.108கரணங்கள் 3.4 விதஅபிநயங்கள்
4.72 மேளகர்த்தாக்கள் 5.8வித நாயகியர்
40. விஜயநகர நாயக்கமன்னர் காலத்தில் அரச சபைகளில் முக்கிய பெண்கள்
1.தேவதாஸிகள் 2. தளியிலார் 3.ராஜநர்த்தகிகள் 4.கோடியர் 5.விறலியர்

- **41 தொடக்கம் 45வரையான வினாக்களுக்கு பின்வரும்அட்டவணையைப் பயன்படுத்தி மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

| சாஸ்திரிய நடனங்கள் | தோன்றிய இடம் | உடைய லங்காரம் | இசை | பிரதான இசைக்கருவி | நிலை |
|---|---|---|---|---|---|
| கதகளி | கேரளா | கூடை போன்ற பாவாடை,மேலங்கி | சோபானஇசை | **A** | மண்டலம் |
| மணிப்புரி | மணிப்பூர் | **B** | ஹிந்துஸ்தனி கர்நாடகஇசை | மிருதங்கம் | அலைபோன்ற அசைவு |
| பரதநாட்டியம் | தென்னிந்தியா | விசிறிமடிப்புஆடை, மேலங்கி | கர்நாடகஇசை | மிருதங்கம் | **C** |
| கதக் | **D** | பிஜாமா,மேலங்கி, சர்வாணி | ஹிந்துஸ்தானி | பக்கவாஜ் தபேலா | சமநிலை |
| குச்சுப்புடி | ஆந்திரா | விசிறிமடிப்புஆடை, மேலங்கி | **E** | மிருதங்கம் | அரைமண்டி |

41. A இல் இடம்பெறவேண்டிய இசைக்கருவி
1.தபேலா 2.செண்டை 3.மிருதங்கம் 4.தவில் 5.கடம்
42. B இல் இடம்பெறவேண்டிய ஆடை அமைப்பு
1.பாவாடை,தாவணி 2.விசிறிமடிப்புஆடை 3.சேலை,வேட்டி
4.கரப்புஉடை 5.பிஜாமா,மேலங்கி
43. C இல் இடம்பெறவேண்டிய நடனத்திற்குரிய நிலை
1.சமபாதநிலை 2.அரைமண்டி 3.முழுமண்டி 4.மண்டலம் 5.திரிபங்கநிலை
44. D இல் இடம்பெறவேண்டிய பிரதேசம்
1. தென்னிந்தியா 2. கேரளா 3. ராஜஸ்தான் 4. ஆந்திரா 5. தஞ்சாவூர்
45. E இல் இடம்பெறவேண்டிய இசை
1. ஹிந்துஸ்தானி 2. சோபானஇசை 3.கர்நாடகஇசை 4.குஜராத்இசை 5.நாட்டாரிசை



46. இப்படத்தில் காணப்படும் நாட்டியக்கலைஞர் ………………….ஆவார்.
1.திரு.வி.கே.நல்லையா
2.திரு.ஈ.கிருஸ்ணையர்
3.திரு.ஏரம்பு.சுப்பையா
4.தி.ம.கைலாசபிள்ளை
5.பிரம்மஸ்ரீ.வீரமணிஐயர்



47. இப்படத்தில் இசைக்கப்படும் வாத்தியக்கருவி ………………….ஆகும்.
1. நையாண்டிமேளம்
2. ரபான்
3. மத்தளம்
4. தப்பு
5. பறை




48. இப்படத்தில் காட்டப்பட்டுள்ள சாஸ்திரியநடனம் ………………….ஆகும்.
1. மணிப்புரி
2. கதக்
3. குச்சுப்புடி
4. கதகளி
5. மோகியாட்டம்



49. இப்படத்தில் காட்டப்பட்டுள்ள பாதபேதம்………ஆகும்.
1. மண்டலம்
2. ஏகபாதம்
3. ஆயதம்
4. ஸ்வஸ்திகம்
5. பிரேங்கணம்



50. இப்படத்தில் ஆடப்படும் கிராமியநடனம் ………………….ஆகும்.
1. நாட்டுக்கூத்து
2. வசந்தன்
3. ஒயிலாட்டம்
4. சிலம்பாட்டம்
5. பொம்மலாட்டம்

**மாகாணக்கல்வித்திணைக்களம்**

**வடமாகாணம்**

**க.பொ.த (உ/தர)ப்பரீட்சை - 2020**

**பயிற்சிப் பரீட்சை வினாத்தாள் 2**

**பரதநாட்டியம் 11 (53T11)**

பகுதி 1 இல் **முதலாம் வினா** உட்பட **இரண்டு** வினாக்களையும் பகுதி 11 இல் எவையேனும் **மூன்று** வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

**பகுதி1**

**1.**

1) வர்ணத்தின் இரு வகைகளும் எவை?. (02புள்ளிகள்)
2) நீர் கற்ற பதவர்ணத்தின் இராகம்,தாளம், இயற்றியவர் பெயர், நடனஅமைப்பாளர், நாயகன், நாயகி ஆகியவற்றைக் குறிப்பிடுக. (06புள்ளிகள்)
3) நீர் கற்ற பதவர்ணத்தின் அனுபல்லவி இரண்டாவது தீர்மானத்தின் சொற்கட்டினைத் தாள அங்கக் குறியீடுகளுடன் எழுதுக. (06புள்ளிகள்)
4) இதில் வரும் 2ஆவது சரணஸ்வரக் கோர்வையின் சொற்கட்டினையும் அதன் பாடல் வரிகளையும் தாள அங்கக் குறியீடுகளுடன் எழுதுக. (06புள்ளிகள்)

**2.**

1) “பீதர்காலனியர்”என்னும் ஆலய நர்த்தகிகளால் ஆடப்படும் சாஸ்திரிய நடனம் எது? (02புள்ளிகள்)
2) இந்நடனத்தின் தோற்றம் பற்றி சுருக்கமாகத் தருக. (02புள்ளிகள்)
3) இந்நடனத்தில் பிரபல்யமான கலைஞர்கள் இருவரின் பெயர்களைத்தருக. (02புள்ளிகள்)
4) இந்நடனத்திற்குரிய ஆடைஅணிகள் எவை? (02புள்ளிகள்)
5) இந்நடனத்திற்குரிய இசை,பக்கவாத்தியம் என்பவற்றைத் தருக. (02புள்ளிகள்)
6) இந்நடனத்தின் ஆடல்முறைகள் பற்றி விபரிக்குக. (05புள்ளிகள்)
7) இந்நடனத்தின் வளர்ச்சி பற்றி விளக்கி எழுதுக. (05புள்ளிகள்)

**3.**

1) ரஸம் என்றால் என்ன? (01புள்ளிகள்)
2) நவரஸங்கள் எவை? (02புள்ளிகள்)
3) இவற்றுக்குரிய நிறம்,ஸ்தாயிபாவம் என்பவற்றைக் குறிப்பிடுக. (05புள்ளிகள்)
4) ஸ்ருங்காரரஸம்,ஹாஸ்யரஸம் ஆகியவற்றை உட்பிரிவுகளுடன் விளக்குக. (2x6=12புள்ளிகள்)

## பகுதி 2

**4.**

1) பரதநாட்டியக்கச்சேரியில் பயன்படுத்தப்படுகின்ற பக்கவாத்தியங்களைத் தருக . (02புள்ளிகள்)
2) இவற்றுள் மெட்டுக்களைக் கொண்டு வாசிக்கப்படும் நரம்புகருவி எது? (02புள்ளிகள்)
3) இவ்வாத்தியத்தின் அமைப்பினை படத்துடன் விளக்குக. (08புள்ளிகள்)
4) பரதநாட்டியநிகழ்ச்சிகளில் இவ்வாத்தியத்தின் பங்களிப்பினைச் சுருக்கமாகவிளக்குக. (08புள்ளிகள்)

**5.**

1) நாயக்கர் காலத்தில் கலை வளர்த்த மன்னர்களைக் குறிப்பிடுக. (04புள்ளிகள்)
2) இக்காலத்தில் எழுந்த கலைப்படைப்புக்களை வரிசைப்படுத்துக. (06புள்ளிகள்)
3) இக்காலத்தில் காணப்பட்ட நடனக்கலை பற்றிய ஆதாரங்களை விளக்குக. (10புள்ளிகள்)

**6.** பின்வருவனவற்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

1) பிரமரிபேதம்
2) ஒளியமைப்பு
3) அருச்சுணன் தபசு
4) கவுத்துவம் (4x5=20புள்ளிகள்)

**7.**

1) மாசு படிந்திருந்த வைரக்கல்லினைச் சுத்தம் செய்வது போல பரதக்கலையைத் தூய்மைப்படுத்தி ஓர் உன்னதநிலைக்கு கொண்டு வருவதே நோக்காகக் கொண்டு அரும்பணியாற்றிய பரதக்கலைஞர் யார்? (02புள்ளிகள்)
2) இக்கலைஞரின் வாழ்க்கை வரலாற்றினை சுருக்கமாகத் தருக. (08புள்ளிகள்)
3) இவர் கலைக்காற்றிய பணிகளை வரிசைப்படுத்துக. (10புள்ளிகள்)

**8.** "அன்று தொட்டு இன்றுவரை ஆலயங்கள் பரதக்கலை வளர்ச்சியில் பெரும்பங்காற்றுகின்றன."
இக்கூற்றினை விளக்கிக் கட்டுரை எழுதுக. . (20புள்ளிகள்)

ஆக்கம் - திருமதி.மதிவாணி.விக்னராஜா
(ஆசிரியவளவாளர்.மாகாணக்கல்வித்திணைக்களம்,வடமாகாணம்)